ந.க.எண். 58/2010

சிறப்புநிலை பேரூராட்சி,
சங்கர்நகர்.
நாள். 01.06.2010

# டெண்டர் விளம்பரம்

சங்கர்நகர் சிறப்புநிலை பேரூராட்சியின் எல்கையில் 2010–2011ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **18.06.2010** ஆம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்படுத்தி ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் சங்கர்நகர் சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றையதினம் வருகை தந்துள்ள ஒப்பந்தத்தாரர்கள் முன்னிலையில் மாலை 3.30 மணிக்கு திறந்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். வேலைகளுக்கான செடியூல் படிவம் உரிய கட்டணம் செலுத்தி 17.06.2010 வியாழக் கிழமை மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

**வேலையின் விவரம்**

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஷெட்யூல் படிவம் 1ன் விலை ரூ. | செலுத்த வேண்டிய டேவணித் தொகை (1%) ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | சிதம்பரநகர் பகுதி, தாதனூத்து பகுதியில் தார் சாலை அமைத்தல். | 10.00 | 1650 | 10000 | 3 மாதங்கள் |
| 2 | தாதனூத்தில் சமுதாயக் கூடம் அமைத்தல். | 15.00 | 3300 | 15000 | 6 மாதங்கள் |
| 3 | கணேஷ்நகரில் சிறுவர் விளையாடும் பூங்கா அமைத்தல் | 5.00 | 1000 | 5000 | 3 மாதங்கள் |
| 4 | 1வது வார்டு தாதனூத்து முதல் தெரு மற்றும் அம்மன் கோவில் தெரு, பண்டாரகுளம் வடக்கு மற்றும் கீழத்தெரு, 7வது வார்டு நாராயணநகர் கிழக்கு மற்றும் வடக்கு தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | 1000 | 5000 | 3 மாதங்கள் |
| 5 | அலுவலக வளாகம் முன்பு வணிக வளாகம் அமைத்தல். | 10.00 | 1650 | 10000 | 6 மாதங்கள் |
| 6 | பண்டாரகுளம் பொது மயானத்தில் நன்மை கூடம் மற்றும் சுற்று சுவர் அமைத்தல் | 5.00 | 1000 | 5000 | 3 மாதங்கள் |
| 7 | பேரூராட்சி பகுதியில் உயர் கோபுர விளக்கு ஒன்றும், 25 எண்ணம் CFL விளக்குகள் அமைத்தல். | 5.00 | 1000 | 5000 | 2 மாதங்கள் |
| | மொத்தம் | 55.00 | | | |

## டெண்டர் நிபந்தனைகள்

1) கட்டிட வேலைகள் கட்டுவதில் நன்கு பரிச்சயமுள்ள ஒப்பந்தத்தாரர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி போடப்பட வேண்டும். கட்டுமானப் பணியில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
2) ஒப்பந்த நமூனா பேரூராட்சி அலுவலகத்தில் 17.06.2010 ஆம் தேதி மாலை 4.00 மணி வரை உரிய தொகையினை செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.
3) முன்வைப்புத் தொகை 17.06.2010 ஆம் தேதி மாலை 4.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி அதற்கான ரசீதை பெற்றுக் கொண்டு ஷை ரசீதை டெண்டருடன் இணைக்கப்பட வேண்டும்.

. . . 2

4) டெண்டர் தேதியை மாற்றவோ, ஒத்திவைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
5) எந்த காரணத்தை முன்னிட்டும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேல் ஒபபந்தப்புள்ளி நமூனா வழங்கப்பட மாட்டாது.
6) திட்டப்பணி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கண்டிப்பாக பணியினை முடிக்கப்பட வேண்டும்.
7) கட்டுமானப் பணிக்கு தேவையான சிமெண்ட், கம்பி, செங்கல், மணல், ஜல்லி போன்ற கட்டுமானப் பொருட்கள் நல்ல தரமானதாக இருக்க வேண்டும். ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் கட்டுமான பொருட்களை வாங்கி அதற்கான தரச்சான்று பெற்று உரிய தொழில் நுட்ப பொறியாளர் ஆய்வுக்குப்பின் பயன்படுத்த வேண்டும். அவசியம் ஷை சான்று பட்டியலில் இணைக்கப்பட வேண்டும்.
8) திட்டப்பணி துவக்குவதற்கு முன் திட்டத்தின் பெயர், வேலையின் விவரம், மதிப்பீட்டுத் தொகை, வேலை ஒப்படைக்கப்பட்ட நாள், முடிக்கப்பட வேண்டிய நாள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் போன்ற விவரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகை அவசியம் வைக்கப்பட வேண்டும்.
9) திட்டப்பணி துவங்குவதற்கு முன்னதாகவும், வேலை செய்யும்போதும் வேலை இறுதி செய்யப்பட்ட பின்னருமாக மூன்று கட்டங்களில் தனித்தனியாக போட்டோ எடுத்து மூன்று பிரதிகள் ஆல்பம் போட்டு தவறாது பட்டியலுடன் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.
10) டெண்டர் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது.
11) எவ்வித காரணமும் காட்டாமல் எந்தவொரு டெண்டரையும் ஏற்றுக்கொள்ளவோ / நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
12) ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு உரியவர் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் டெண்டர் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு உடன்படிக்கையினை எழுதி கையொப்பமிட்டு பேரூராட்சியில் ஒப்படைக்க வேண்டும்.
13) கட்டுமானப் பணிக்கு மேலும் 5% டேவணித் தொகை பட்டிலில் பிடித்தம் செய்து டெப்பாசிட்டில் வைக்கப்படும். டேவணித் தொகைக்கு வட்டியேதும் வழங்கப்படமாட்டாது. ஷை வேலைக்கான தணிக்கை முடிவுக்குப் பிறகு பிடித்தம் ஏதுமிருப்பின் பிடித்தம் போக உரிய தொகை வழங்கப்படும்.
14) டெண்டர் கவர்மீது மூடி முத்திரையிடப்பட்டு வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்தத்தாரர் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
15) வேலைக்கான முன்பணம் ஏதும் வழங்கப்பட மாட்டாது. அதேபோல பகுதி தொகைக்கு (Part Bill) பட்டியல் சுதந்தரிக்கப்படமாட்டாது.
16) ஒப்பந்ததாரர் சென்ற நிதியாண்டு முடிய தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு வருமானவரி செலுத்தியதற்கான விவரம் இணைக்கப்பட வேண்டும்.
17) ஒப்பந்ததாரருக்கு இப்பேரூராட்சியில் தொழில்வரி விதிக்கப்பட்டிருப்பின் கடந்த அரையாண்டு முடிய தொழில்வரி செலுத்தியதற்கு ரசீது இணைக்கப்பட வேண்டும்.
18) கட்டுமானப் பணிகள் கட்டும்பொழுது எதிர்பாராமல் நிகழும் இயற்கை இடர்பாடுகள் மற்றும் விபத்துகளுக்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் முழுபொறுப்பினை ஏற்று அவற்றுக்கான இழப்பினை வழங்கப்பட வேண்டும். ஆகவே ஒப்பந்ததாரர் முன்கூட்டியே அவற்றிற்கான காப்புறுதி செய்து கொள்ள வேண்டும்.
19) பணியின் மதிப்பீட்டுத்தொகை ரூ.10.00 லட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கான விபரத்தை தமிழ்நாடு அரசு இணையதளமான http://www.tenders.tn.gov.in – என்ற இணையதளத்திலும், ரூ.5.00 லட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கான விபரத்தை பேரூராட்சிகளின் இணயைதளமாக http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளத்தின் முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர் (பொ)
சங்கர்நகர் சிறப்புநிலை பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்

**பெறுநர்**

பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்கள்,
சங்கர்நகர் சிறப்புநிலை பேரூராட்சி.

**நகல்:-**

1. அலுவலக விளம்பர பலகை
2. செயல் அலுவலர் பேரூராட்சி, நாரணம்மாள்புரம் பேரூராட்சி விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்திட அனுப்பப்படுகிறது.
3. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி.
1 உதவிசெயற்பொறியாளர், உதவி இயக்குனர், பேரூராட்சிகள் அலுவலகம் திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2 திருநெல்வேலி மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
3 இளநிலை பொறியாளர், சங்கர்நகர் தொகுப்பு, சங்கர்நகர் பேரூராட்சி.
4 தலைவர், பேரூராட்சி மன்றம், சங்கர்கர்.